# ★ அரசுக்கு எதிராக மீண்டும் நம்பிக்கையில்லா பிரேரணை

[கொழும்பு]
எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றில் அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.
சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையில் ஐந்து எதிர்க் கட்சிகள் அரசுக்கு எதிரான (4-ம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாண பொதுநூலகம்

விலை ரூபா 5.00

# ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 26 இதழ் 87
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 08 – 05 – 1992

## முருங்கன் பகுதி புலிகள் கட்டுப்பாட்டில்

(யாழ்ப்பாணம்)
முருங்கன், மன்னார் பகுதிகளில் இராணுத்தினர் அண்மையில் மேற்கொண்ட "பச்சைப்பட்டி" இராணுவ நடவடிக்கையை, விடுதலைப் புலிகள் எதுவித சேதமுமின்றி முறியடித்துவிட்டதாக மன்னார் மாவட்டத்தின் விசேட (4ம் பக்கம் பார்க்க)

## தமிழர் கொலைகளை இராணுவம் மூடிமறைத்தது

(கொழும்பு)
வெலிகந்தவில் தமிழ் கிராமம்மீது முஸ்லிம் ஊர்காவல் படை நன்கு திட்டமிட்டு மேற்கொண்ட தாக்குதலை இராணுவ அதிகாரிகள் மூடி மறைத்துள்ளதாக பி. பி. ஸி. தெரிவித்தது.
தமிழ் கிராமம்மீது முஸ்லிம் (4ம் பக்கம் பார்க்க)

# ★ மட்டக்களப்பில் நேற்று புலிகள் மும்முனைத் தாக்குதல்

# ஏழு படையினர் உயிரிழந்தனர்

## ஒரு அதிகாரி உட்பட 10 படையினர் படுகாயம்

(மட்டக்களப்பு)
**மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று புலிகள் மேற்கொண்ட மூன்று வெவ்வேறு தாக்குதல்களில் 7 படையினர் உயிரிழந்ததுடன், ஒரு உயர் அதிகாரி உட்பட 10 படையினர் படுகாயம் அடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.**

நேற்றுக்காலை செங்கலடியிலிருந்து தொப்பிகலை நோக்கி ரோந்து சென்ற படையினர் மீது புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் 4 படையினர் கொல்லப்பட்டதுடன் ஒரு உயர் அதிகாரி உட்பட ஏழு படையினர் படுகாயமடைந்தனர்.
இதே நேரம் மட்டக்களப்பில் வாகரை - கதிரவெளிப் பகுதியில் இடம்பெற்ற மோதலில் இரு படையினர் கொல்லப்பட்டு மூவர் படுகாய (4ம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் தினமும் தமிழர் கடத்தப்படுகின்றனர்

(மட்டக்களப்பு)
கிழக்கு மாகாணத்தில் கடந்த சில தினங்களில் பெருமளவு தமிழர் கடத்தப்பட்டு காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.
முஸ்லிம் ஊர்காவல் படையும், 'ஜிகாத்' அமைப்பும், முஸ்லிம் காடையருமே தமி (4-ம் பக்கம் பார்க்க)

## ஈரோஸ் எம்.பிக்கள் கொழும்பு வருவர்; லங்காதீப செய்திக்கு மறுப்பு

(யாழ்ப்பாணம்)
இனப்பிரச்னைக்குதீர்வுகாண இதுவரை நாடாளுமன்றத்தை பகிஷ்கரித்துவந்த 9 ஈரோஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொழும்புக்கு வருகின்றார்கள் என்று 'லங்காதீப' என்ற சிங்களப் பத்திரிகை நேற்று வெளியிட்ட செய்தியை சம்பந்தப்பட்ட வட்டாரங்கள்மறுத்துள்ளன.
இனப்பிரச்னைக்கு தீர்வு காணும் முக்கிய நோக்குடன் (4ம் பக்கம் பார்க்க)

## காஷ்மீர் மாநிலத்திற்கு கூடிய சுயாட்சி?

[ஸ்ரீநகர்]
இந்தியாவை காஷ்மீர் மாநிலத்திற்கு எவ்வளவு முடியுமோ அவ்வளவுக்கு சுயாட்சி வழங்க முக்கிய அரசு தயாராயிருப்பதாக காஷ்மீரின் ஆளுநர் திரு. சக்ஷேனா தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் கூறுகையில்; (4-ம் பக்கம் பார்க்க)

## 30,000 பேருக்கு 4,000 ரூபா பண உதவி

[யாழ்ப்பாணம்]
யாழ். மாவட்டத்தில் 30 ஆயிரம் பேருக்கு உற்பத்தித் திறன் ஊக்குவிப்புப் பணமாக ரூபா 4ஆயிரம் மிகவிரைவில் வழங்கப்பட இருக்கின்றது.
கடந்த இரு வருடங்களுக்கு முன் மேற்படி பணத்தை யாழ். மாவட்டத்திலுள்ள 30 ஆயிரம் பேருக்கு வழங்குவதற்கு அரசு அனுமதி அளித்திருந்தபோதிலும் இராணுவ நடவடிக்கைகளினால் இவை இடை நிறுத்தப்பட்டிருந்தது.
தற்போது யாழ்.அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகரின் வேண்டுகோளின் பேரில் இப்பணத்தை விரைவில் வழங்குவதற்கு அரசு இணக்கம் தெரிவித்திருப்பதாக யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (வி)

## இலங்கை பிரச்னையை தீர்க்க பிரி. நாடாளுமன்று உதவும்?

[லண்டன்]
இலங்கை இனப் பிரச்னை தீர்வுக்கு பிரிட்டிஷ் நாடாளுமன்றம் உதவக் கூடியதோர் ஏதுநிலை தோன்றலாமென லண்டன் செய்திகள் தெரிவிக்கின்றன.
பிரிட்டிஷ் நாடாளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றிய சபாநாயகர் திருமதி பெட்டி பூத்துரோய், சிறுபான்மை மக்களின் பிரச்னைகளை தீர்க்கப் பாடுபட்டு போவதாக உறுதியாகக் கூறினார்.
இதேவேளை தனது கன்னிப் பேச்சை இலங்கையரான திரு. நிரஞ்சன் தேவா பிரிட்டிஷ் நாடாளுமன்றில் நேற்று முன்தினம் ஆற்றினார்.
இலங்கையுடன் கடந்த 15 வருடங்கள் மிக நெருங்கிய தொடர்புடைய திருமதி பெட்டி பூத்ரோயும், திரு. (4-ம் பக்கம் பார்க்க)

## பிரபாவை இந்தியா கோரினால் அதனை இலங்கை பரிசீலிக்கும்

[கொழும்பு]
ராஜீவ் கொலை வழக்கில் பிரதான குற்றவாளிகளா அறிவிக்கப்பட்டுள்ள புலிகள் தலைவர் திரு. பிரபாகரனையும், பொட்டம்மானையும் விசாரணைக்காக ஒப்படைக்குமாறு இந்தியா கோரினால் அதுபற்றி பரிசீலிக்கத் தயாராயுள்ளதாக இலங்கைஅரசு அறிவித்துள்ளது.
நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த இலங்கையின் வெளியுறவுச் செயலர் திரு. பேர்னாட் திலகரத்ன மேலும் கூறுகையில்:
[4ம் பக்கம் பார்க்க]

# ★ புலிகள்மீது தடை இந்தியஅரசின்நிலைப்பாட்டில் தமிழக கட்சிகள் அதிருப்தி

(சென்னை)
விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்வது தொடர்பாக இந்திய மத்திய அரசு கொண்டுள்ள நிலைப்பாடு குறித்து தமிழகத்திலுள்ள அரசியல் கட்சிகள் அதிருப்தியடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.
புலிகளைத் தடை செய்யப் போதிய ஆதாரம் இல்லையென இந்திய மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் கூறியதை அடுத்தே தமிழ [4-ம் பக்கம் பார்க்க]

## தமிழக அரசுக்கு நீதிமன்று எச்சரிக்கை

(சென்னை)
பத்திரிகையாளர் திரு. கே. பி. சுனிலை கைது செய்வதற்கு உச்சநீதிமன்றம் விதித்திருக்கும் தடை உத்தரவுக்கு எதிரான எந்த நடவடிக்கையும் நீதிமன்ற அவமதிப்பு குற்றவியல் குற்றமாகும் என தமிழ்நாடு அரசை இந்திய உச்ச நீதிமன்றம் எச்சரித்திருக்கிறது
தமிழ்நாடுசட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி முத்தையா 'இலஸ்ரேற்றட் வீக்லி ஒவ் இந்தியா'வின் முன்னாள் செய்தியாளர் திரு. கே. பி. சுனிலை கைது செய்ய பிறப் (4ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## கணிதம் O/L

92. 93 விசேட கவனிப்பு ஆரம்பத்தில் இருந்து உயர்ந்த பெறுபேறுகள் அடையக் கற்பிக்கப்படும். ஆசிரியர் B. Sc (Cey). 85, சிவன்கோவிலடி, திருநெல்வேலி. (சி–6260)

## A/L இரசாயனம்

புவிவளம் ஆரம்பம் 9–5–92 சனி 2 30 p. m., வினாவிடை ஆரம்பம் 9-5-92 சனி 3-15 p. m. ஆசிரியர் சத்தீஸ், 108, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். A/L 94 செறிவு ஆரம்பம் 9–5–92 சனி 6–30 a. m. [சி-6266]

## தவறிவிட்டது

உடுப்பிட்டி இமையாணன் மேற்கு க. பரதசிவத்தின் சவூதிப்பிரயாண விமானப் பயணச்சீட்டு தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்தில் தந்துதவுமாறு பணிவுடன் கேட்கின்றேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (சி–6269)

## மணமகன் தேவை

நட்சத்திரம் பூசம் 36 வயதுடைய ஆங்கில ஆசிரியைக்கு மணமகன் தேவை. அரசாங்க தொழில் அல்லது தனியார் நிறுவனத்தில் தொழில் பார்ப்பவர் அல்லது வெளிநாட்டில் தொழில் செய்பவர் விரும்பத்தக்கது. தொடர்பு: செ. ஜெயரத்தினம் இலட்சுமி திருபணசேவை, நவாலி கிழக்கு, மானிப்பாய். (சி–6270)

## சிறப்புரை

யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் எதிர்வரும் சனி, ஞாயிறு பிற்பகல் 3–00 மணிக்கு சிவஞானமுனிவர், உமாபதி சிவாசாரியார் நினைவுச் சிறப்புரைகள் சைவசித்தாந்தமணி மு. திருஞானசம்பந்தபிள்ளை. முதறிஞர் க. சி. குலரத்தினம் நிகழ்த்துவர். அழைப்பு: மெய்கண்டதேவா நிறுவனம். [சி-6267]

# புதிய அதிகாரிகள் தலைமையில்

## இராணுவம் போருக்குத் தயாராகிறது'

(வடமராட்சி)

புலிகளின் தீவிர புதிய முறைகளினால் பல வழிகளிலும் தோல்வியைத் தழுவி வரும் ஸ்ரீலங்கா அரசும் இராணுவமும் புதிய வழியில் தாம் மீண்டும் போரிட தம்மை தயார்படுத்திக் கொள்கின்றது. மேற்படி ஸ்ரீலங்கா அரசின உபாயத்தந்திரங்களை போராளிகளும் பொதுமக்களும் உடனுக்குடன் முறியடிக்க வேண்டும்.

கடற்புலிகளின் விளையாட்டு போட்டி பரிசளிப்புவிழாவில் யாழ்.மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் இளம்பரிதி இவ்வாறு கூறினார்.

கடந்த நான்காம் ஐந்தாம் திகதிகளில் தமிழீழ கடற்புலிகளின் விளையாட்டுப் போட்டிகள் வல்வையில் ஆரம்பிக்கப்பட்டு சகல விளையாட்டுக்களும் பருத்தித்துறைக் கடலிலேயே நடைபெற்றது.

மேற்படி விளையாட்டுகளில் வெற்றியீட்டிய வீரர்களுக்கு கடலில் உயிர் நீத்த 87 கடற்புலிகளின் நினைவாக அவர்களின் பெற்றோர்களினால் வல்வை திருவில் புனித மைதானத்தில் கடற்புலி மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் செல்வி நளாயினி தலைமையில் பரிசளிப்பு விழா நடைபெற்றது.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

எமது பெருந்தலைவரின் தனித்துவமான புதிய வியூக அமைப்புப் போர் முறையினால் தான் இன்று ஸ்ரீலங்கா இராணுவத்தினரை பல வழிகளிலும் தோல்விகாணச் செய்கின்றோம்.

கடந்த 20 வருடமாக எமது விடுதலையுத்தம் நடைபெறுகின்றது. இதுவரை 4500 வீரவேங்கைகள் தயாகமீட்பிற்காக வீரமரணமடைந்துள்ளனர் அவர்களின் கனவுகள், நினைவுகள் இலட்சியங்களையும் மக்களும் உலகமும் உடனுக்குடன் நினைவு கூருகின்றார்கள்.

மேலும் எமது வீரர்களின் அயராத போர் முறையினால் 3000 திற்கும் அதிகமான இராணுவத்தினர் பலியானதுடன் 4000 இராணுவத்தினர் தலைமறைவாகியும் உள்ளனர். இராணுவத்தினரிடையே பெரும்பிளவு ஏற்பட்டுள்ளதே இதற்குக் காரணமாகும்.

இன்று சிங்கள இராணுவத்திற்குப் புதிதாகத் தலைமை தாங்கவந்துள்ளார் சிசில் வைத்தியரட்ண. இவர் எம்மை முறியடிக்க முன்வந்தபோது இராணுவம் பின்வாங்குகின்றது. காரணம் இவர் ஜே.வி.பி. போரின் போது பல்லாயிரக்கணக்கான சிங்கள இளைஞர்கள் கொல்லப்படுவதற்குக் காரண கர்த்தாவாக விளங்கினார் என்பதே. இன்று மீண்டும் பெரிய இராணுவ அதிகாரிகளை நீக்கிப் பல புதிய அதிகாரிகளின் தலைமையில் போருக்கு இராணுவம் தயாராகின்றது.

இதற்கு ஒருவழியாகதற்போது ஸ்ரீலங்கா அரசு பலவிதமான வதந்திகளை கொழும்பு சென்று வரும் மக்கள் ஊடாக தமிழீழத்திற்கு அனுப்பி வருகின்றது. இதன்மூலம் எம் மக்களையும் எம்மையும் திசை திருப்ப முயல்கின்றது.

யாழ்ப்பாணத்தின் மேல் ஸ்ரீலங்கா அரசு போர் தொடுக்குமேயானால் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் இறப்பார்கள் என்று ஸ்ரீலங்கா அரசிற்கும் துரோகத்திற்கு துணைபோகும் தமிழ்க்கும்பல்களுக்கும் தெரியும். இது இவர்களுக்கு பெரும் பாதிப்பாக முடியும். எனவே தான் மேற்படி பலவிதமான வதந்திகளால் குழப்பம் விளைவிக்க முயல்கின்றார்கள் இதை எம் தமிழீழ மக்கள் உணர்ந்து இவற்றை முறியடிக்க முன்வரவேண்டும்.

போராளிகள் மக்களுக்காகவே வாழ்கின்றார்கள். மக்களைக் காப்பாற்றவும் விடுதலையே லட்சியமாக கொண்டு போராடுகின்றார்கள் உடல்கள் சிதறிய துண்டங்கள் போல எமது பிரதேசங்களும் துண்டாடப்படுவதை போல ஸ்ரீலங்கா அரசிடம் இருந்து தமிழீழத்தை துண்டாடி எமது பிரதேசம் நிர்மாணிக்கப்படும் என்றார்.

மேற்படி விழாவில் மன்னார் மாவட்ட கடற்புலிகளின் அரசியற்பொறுப்பாளர் அமுதன், மன்னார் மாவட்ட குலம் அண்ணா, யாழ். மாவட்டக் கடற்புலிகளின் அரசியற் பொறுப்பளேர் ரணிஸ்மாஸ்டர், செல்வி தனேயச்செல்வி (கவிதா), கடற்புலிகளின் பொறுப்பாளர், சூசை ஆகியோரும் உரையாற்றினர்.

இறுதியாக பரிசளிப்புவிழாவும் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன. (51)


# விக்ஞ கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றேட். யாழ்ப்பணம்.

[கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்]

## A|L கலை, வர்த்தகம்

94 பிரிவு - 2
ஆரம்பம்: 09-05-1992
காலை 8.00 மணி

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. கலாகரன் |
| வர்த்தகம் | — | திரு. தேவா |
| கணக்கியல் | — | திரு. வன்னியசிங்கம் |
| அளவையியல் | — | திரு. சுப்பிரமணியம் |
| தமிழ் | — | திரு. குழந்தை |
| இந்து நாகரிகம் / இந்து சமயம் | — | திரு. காரைசுந்தரம்பிள்ளை |
| புவியியல் | — | திரு. குணராசா |
| அரசியல் | — | திரு. ஜெயகாந்தன் |
| வரலாறு | — | திரு. சிறீதரன் |

[எ 2118]


## Dr. Arunasalam Sivapathasundaram Second Memorial Lecture (1991)

By

**Prof. C. Sivagnanasundram**

M.B.B.S. (Ccy.), D.P.H. (Lond.), Ph. D. (Lond.)

ON

SOCIO - CULTURAL CHALLENGES IN CHILD CARE

Will be held on
**Tuesday 12th May, 1992 at 3-30 p. m.**
in the
Kailasapathy Auditorium
University of Jaffna.

All Are Welcome

(A-2122)

## UNIVERSITY OF JAFFNA- SRILANKA

### External Examination First in Arts/ First Commerce

Examination Entry forms will be received from registered candidates, who wish to sit the above examination Scheduled to commence in October 1992.

Examination Entry forms could be obtained from the External Examination and Registration Unit, University of Jaffna in person or by post from 11-05-1992.

Those who wish to obtain the forms in person are required to produce a receipt from the Shroff, Finance Branch of the University of Jaffna for the payment of Rs. 15/-. Those who wish to obtain the forms by post are required to send a Money order / Postal order for Rs. 15/- drawn in favour of Bursar, University of Jaffna together with a self Addressed envelop affixing stamp to the value of Rs. 8/-.

Completed Examination Entry forms should be submitted to the External Examinations & Registration Unit on or before 20-05-1992.

Registrar.
University of Jaffna.


[A-2124]

## யாருடையது?

(யாழ்ப்பாணம்)

இருபாலையில் ஒருபிளாஸ்ரிக் பாக், நீர்வேலி தெற்கைச் சேர்ந்த நா. சுப்பிரமணியம் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர் தகுந்த ஆதாரங்கள் காட்டி பெற்றுக்கொள்ளலாம்.

# ஓராண்டு நினைவஞ்சலி



## மாரிமுத்து கனகரட்ணம்

| தோற்றம்: | ஆண்டுத் திதி: | மறைவு: |
|---|---|---|
| 21-04-1931 | 08-05-1992 | 20-04-1991 |

தந்தையாய், குருவாய், தலைவனாய் எம்மை வழிநடாத்தி இன்று சிவத்தோடு கலந்துவிட்ட உங்கள் இனிமையான நினைவுகள் என்றும் எம்மை விட்டு அகலா.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இல. 1, சிவன்பண்ணை வீதி,
யாழ்ப்பாணம்.

(சி–6272)

## இன்று உலக செஞ்சிலுவைச் சங்க தினம்:

# செஞ்சிலுவைசங்கஅடிப்படை இலக்கினை வளர்த்துக் கொள்ள உறுதி செய்வோம்

(யாழ்ப்பாணம்)

உலகரீதியில் உன்னதமான நிகழ்வுகள் வருடாவருடம் நினைவுகூரப்படுவதை யாமறிவோம். ஐ. நா. தினம், மே தினம் போன்ற மாபெரும் நினைவுகளையும் செயல்களையும் ஒத்ததோர் தினமாக உலக செஞ்சிலுவைத் தினம் அகிலமெங்கும் ஆரவாரத்துடனும் ஆக்கபூர்வத்துடனும் வருடாவருடம் மே மாதம் எட்டாம் திகதி கொண்டாடப்பட்டு வருகின்றது.

வழக்கம்போல இம்முறையும் செஞ்சிலுவை சங்க தினத்தை கொண்டாடும் இலங்கை செஞ்சிலுவைச்சங்க யாழ்ப்பாணக் கிளைத் தலைமை அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

உலக செஞ்சிலுவைத் தினம் என்றவுடன் எமது மனக்கண் முன் தோன்றுபவர் செஞ்சிலுவையின் தந்தையான அமரர் ஜீன்கென்றிடுனான்ட்.

சுவிற்சர்லாந்து நாட்டின் ஜெனீவாப் பேருரல 1828ம் ஆண்டு மே மாதம் 8ம் திகதி பிறப்பெடுத்த அமரர் கென்றிடுனான்ற் 1910ம் ஆண்டு ஒக்டோபர் 30ம் திகதி அமரத்துவமடைந்தார். 82 வயதுவரை வாழ்ந்த டுவான் வாழ்வும் செஞ்சிலுவையின் செயல்முறையும இரண்டறக்கலந்தவை.

வியாபாரநோக்கோடு இத்தாலிசென்றவர் அங்குநிகழ்ந்த போரின் அனர்த்தங்களைக் கண்டு மனம் அவதியுற்றார். எந்தத் துணையுமின்றி உடன் செயலில் இறங்கி 'சகலரும் சகோதரரே' என்ற கோஷத்துடன் பாதிப்புற்றோருக்கு பாதுகாவலனுனர். 1862ல் தனது இவ்வனுபவங்களையும் அனர்த்தங்களின அவலங்களையும் ''சொல்பேரீனோவின் நினைவுகள்'' எனும் தனது நூலில் விபரித்தார். இதனுல் கவரப்பட்ட பலர் இவருடனிணைந்து 1863ம் ஆண்டு சுவிற்சர்லாந்தில் செஞ்சிலுவைச் சங்கம ஒன்றை ஸ்தாபித்தனர். அது பாரபட்சமின்றி மனிதாபிமான நோக்கோடு போர் அவலங்களை நிவர்த்திக்க அபாய எல்லைகளுக்குள்ளும் அயராது உழைத்தது. இன்று உலகம் முழுவதும் ஆலவிருட்சமாய் செஞ்சிலுவைச் சங்கங்கள் வியாபித்துள்ளன. டுவான் சேவையை நினைவுகூரும் தமது சேவைக்கு மக்களைத் திரட்டும் மனிதாபிமானத்தை மக்களிடம் புகட்டும் நாளாக அமரர் கென்றி டுனான்ற்றின் பிறந்தநாளான மே 8ம் திகதியை உலக செஞ்சிலுவைத் தினமாகப் பிரகடனப்படுத்தி வருடாவருடம் கொண்டாடி வருகின்றது.

மனிதாபிமானம், பாரபட்சமின்மை, நடுநிலைமை, தனித்துவம், தொண்டு மனப்பான்மை, ஒன்றிணைதல், பிரபஞ்சத்துவம் எனும் செஞ்சிலுவைச்சங்க அடிப்படை இலக்குகளை நாமும் எம்முடன் வளர்த்துக்கொள்ள இந் நன்நாளில் உறுதிசெய்வோம்.

## இராசி பலன்

08 05/1992
வெள்ளிக்கிழமை
(தமிழுக்கு சித்திரை 26)

ஷஷ்டி பி. ப. 1-52 வரை. புனர்பூசம் மு. ப 858 வரை. சித்தயோகம் இராகுகாலம் காலை 10-24 முதல் 11 54 வரை. சுபநேரம் மாலை 5-54 முதல் 7-24 வரை ஷஷ்டி விரதம்.

மேடம்: வாதப்பிரதிவாதம் செல்வாக்கு கல்வியால் மேன்மை.

இடபம்: கருத்து வேற்றுமை மாமனுர் பகை, குடும்ப பகை,

மிதுனம்: பெரிய மனிதர் ஆதரவு, குடும்பசுகம், வெகுமதி.

கடகம்: ஏமாற்றப்படுதல், வேண்டாத உறவு, விரக்தி.

சிங்கம்: தாயார் மூலம் நன்மை, சத்துரு ஐயம், விவேகம்,

கன்னி: கலைஞானம், காரிய சித்தி. இனசன உதவி.

துலாம்: சயனசுகக்குறைவு, சகோதரி பகை. கடன்சுமை.

விருச்சிகம்: மனசஞ்சலம், தொழில் பாதிப்பு கண்டனம்.

தனுசு: சமூகத்தில் செல்வாக்கு, அதிக செலவு தானதர்மம்.

மகரம்: குடும்ப கௌரவம், பெரியோர் ஆசி, பயணம்.

கும்பம்; கண்ணில் ரோகம். இனசனவிரோதம், மனச்சுமை.

மீனம்: புத்திரர் கவலை: கீழ்ப்படிதல், படபடப்பு.

ஜோஸ்யர்

## நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க ஊர்காவற்றுறை பிரிவினர் இன்று சர்வதேச செஞ்சிலுவைத் தினத்தை கொண்டாடவுள்ளனர். கிளை தலைவர் எஸ். ஆர். சுதர்சன் தலைமையில் காலை கோவில் வீதியில் அமைந்துள்ள பிரிவு பணிமனையில் படை அணி வகுப்பு மரியாதையுடன் நிகழ்ச்சிகள் நடைபெறும்.

0 0 0

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ். கிளையினர் இன்று 8ம் தேதி வெள்ளிக்கிழமை செஞ்சிலுவைச் சங்க தினம் கொண்டாடவிருக்கின்றது.

யாழ். கிளை தலைவர் வைத்தியகலாநிதி செ. சு. நச்சினார்க்கினியன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராக பேராசிரியர் எஸ். சிவஞானசுந்தரம் கலந்துகொள்வார்.

இன்று 9-00 மணிக்கு செஞ்சிலுவைச்சங்க தினத்தை முன்னிட்டு யாழ். போதனவைத்தியசாலையிலும், மந்திகை ஆதார வைத்தியசாலையிலும் இரத்ததானம், தெருநிகழ்வு, முதலுதவி ஆகியவையும் பிற்பகல் கலை நிகழ்ச்சியும் இடம்பெறும்.

## கோலாலம்பூரில் இராவணன் மகாநாடு; மே 17-ம் திகதி நடைபெற ஏற்பாடு

(வேலணை)

இராவணன் மாநாடு எதிர்வரும் 17-ம் திகதி வியாழக்கிழமை காலை மலேசியாவில் கோலாலம்பூர் நகரில் உள்ள தேவான் பண்டாரயா ஆஷ்டோரியக் சாலான்ராசாலவுட் மாநகர மண்டபத்தில் ஆரம்பமாகும். இம்மாநாடு காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரை நடைபெறும்.

மலேசியாவில் உள்ள தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் தலைவர் திரு. இரா. நா. வீரப்பன் தலைமையில் நடைபெறும் இம் மாநாட்டில் இராவணன் பற்றிய காவியக் கருத்தரங்கம், பாவரங்கம், பட்டிமன்றம், வழக்காடுமன்றம், வராயம் என்பன நடைபெறவிருக்கின்றன.

அத்துடன் பரத நடனப் போட்டிகள், ஓபனைப் போட்டிகள், திருக்குறளோதும் போட்டிகள் என்பனவும் அன்றைய விழாவில் இடம் பெறவிருக்கின்றன.

இராவணன் பற்றிய கதை, கட்டுரை, பாவியம், ஓவியம், விளம்பரப்பதாதை (திரைச்சோலை), சுலோகம் எழுதும் போட்டிகளும் இடம்பெறுகின்றன.

இவ்வாறு நடத்தப்படுகின்ற போட்டிகளில் மலேசியாவில் உள்ள சுமார் 200க்கும் மேற்பட்ட தமிழர்கள் பங்குபற்றுவதற்கு விண்ணப்பித்துள்ளனர்.

இப்போட்டிகளில் வெற்றி பெறுவோர்களுக்குதகுதியான பரிசுகளும் வழங்கப்படவுள்ளது.

இவ்விழாவிற்குதமிழகத்தில் இருந்தும புலவர்கள், பாவலர்கள், பல கல்விமான்களும் கலந்துகொள்வதற்கு சம்மதம் தெரிவித்துள்ளார்கள்.

இவ்விழா நடைபெறும் மண்டபத்தில் அனைத்துலகிலும் உள்ள லட்சக்கணக்கானதமிழ் நூல்களின் நிழற்படக் கண்காட்சி ஒன்றும் நடாத்துவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

விழா மண்டபத்தில் இராவணன் பற்றி எழுதிய மலர் ஒன்று வெளியிட்டுவைக்கப்படும். இதனை மலேசியா தமிழியக்கழகம் தயாரித்து வெளியிட்டுள்ளது.

மாநாட்டிற்கான சகல ஏற்பாடுகளையும் மலேசியா நாட்டின் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் பொதுச்செயலாளர் திரு. மு. மணிவெள்ளையன், மாநாட்டுச்செயலர் திரு. அ. இளவழகன் ஆகியோர்கள் இணைந்து செய்துள்ளனர். [75]

## இன்று

(பருத்தித்துறை)

பருத்தித்துறை தும்பளை அருள்மிகு நெல்லண்டை பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த வெளிமடை உற்சவமும் பொங்கல் விழாவும் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும். (52)

0 0 0

(கொழும்பு)

இன்றுமுதல் கொழும்பில் புதிய தொலைக்காட்சி சேவை ஆரம்பிக்கப்படுகிறது.

இப்புதிய ஒளிபரப்புச் சேவையை தனியார் நிறுவனமொன்று பொறுப்பேற்று நடத்தவுள்ளது. (சே)

## மதுரை பஸ் நிலையத்தில் இருவர் கைது

(சென்னை)

மதுரை பேருந்து நிலையத்தில் வெடிமருந்துப் பொருட்களுடன் இரண்டுபேர் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

200 ஜெலற்றின் குச்சிகளும் அவற்றை வெடிக்கவைப்பதற்கான 400 'டெற்றனேற்றர்'களும் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டன.

இராமேஸ்வரம வழியாக இலங்கைக்கு கடத்த இப்பொருட்களை இவ்விருவரும் எடுத்துச் சென்றதாக பொலிசார் சந்தேகிக்கின்றனர்.

இவர்களுடன் இருந்த மற்றொருவர் தப்பி ஓடிவிட்டார். (சே)

## நேர்முகப்பரீட்சை

[மானிப்பாய்]

எழுதுவினைஞர் பரீட்சையில் சித்தியடைந்தவர்களில் முதலில் 48 பேருக்கு எதிர்வரும் 11ம் திகதி திங்கட்கிழமை யாழ். செயலகத்தில் நேர்முகப் பரீட்சை நடைபெறவுள்ளது. [71]

## "போராட்டத்தின் மூலம் உரிமைகளைப் பெற்று சுதந்திரமாக வாழ்வோம்"

(யாழ்ப்பாணம்)

''இன்று எங்களுக்குச் சொந்த நிலம் இல்லை, தாயகம் இல்லை. இவைகளின் போராட்டதை முன்வைத்து நாம் முன்பு பெற்றிருந்த உரிமைகளைப் பெற்று சுதந்திரமாக வாழ்வோம்.''

இவ்வாறு நல்லூரில் நடைபெற்ற இசைவிழாவில் விடுதலைப்புலிகள் மக்கள் மகளிர் முன்னணி அரசியல் பிரிவு பொறுப்பாளர் செல்வி ஜெயா தெரிவித்தார்.

அவர் மேலும் பேசியதாவது:

இசை, தீராத நோய்களுக்கு மருந்தாகின்றது. இது எமது மருத்துவ வரலாறு கூறுகிறது.

தொன்மை, அழகு, வரலாறுபெற்றிருக்கும்எம்மினம், உரிமைகளுக்காக அனைத்து மக்களும் தோளோடு தோள் நின்று விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச்செல்கிறோம்.

இன்றைய நெருக்கடியான காலகட்டத்தில் கூட விடுதலை வேண்டி நிற்கின்ற மக்கள் விழா கொண்டாடுகிறார்கள்.

எமது இனத்தின் வடிவங்களாக ஓவியம், சிற்பம், இசை, நடனம் இருக்கிறது. எமது தமிழர்கட்கு தனித்துவமான கலை, பண்பாடு உண்டு. இந்த அனைத்துக்கும் தகுதி பெற்றிருக்கிறோம். -சு

தனியார்

## பஸ்சேவை அதிகரிப்பு

[யாழ்ப்பாணம்

யாழ். மாவட்டத்தில் மக்களின் நன்மை கருதி கூடுதலான தனியார் பஸ் வண்டிகள் சேவைக்கு விடப்பட்டுள்ளன என தனியார் பஸ் உரிமையாளர் ஒருவர் தெரிவித்தார்.

தெல்லிப்பழை -காங்கேசன்துறை வீதியில் இதுவரை ஒரு பஸ்தான் சேவைக்கு அமர்த்தப்பட்டிருந்தது. இப்பொழுது இரண்டு பஸ்கள் கூடுதலாக சேவைக்கு விடப்பட்டுள்ளன.

## தமிழீழ மீட்பு நிதி கடன் மீளளிப்பு

[யாழ்ப்பாணம்]

தமிழீழ மீட்பு நிதிக்கு கடனளித்தோரில் தேர்ந்தெடுக்கப்பட்ட 536 பேருக்கு கடன் மீளளிப்பு இம்மாதம் 16-ம், 17-ம் திகதிகளில் நடைபெறும்

தமிழீழ மீட்புநிதி கடன் மீளளிப்பு பெறுபவர்கள் இலக்கம் வருமாறு;

தொடர்பு இல: யா/ந/

21, 25, 123, 436, 490, 506, 2397, 3027, 4209, 4731.

யா/யா

59, 103. 170. 406. 544, 665, 1248, 3417, 4141, 4318

யா/கோ

16, 243, 320 541, 2966, 3617, 3795, 5674.

யா/மா

749, 1339, 2834, 3400, 3667, 3707.

யா/உ

01, 501, 659, 783, 954.

யா தெ

63, 139, 288, 371, 516, 579, 602, 1681,

யா/ச/

53, 93, 94, 251, 563, 2723 3189, 3722, 4635.

யா/வே/

176, 218, 1234, 1771, 1887.

யா/கா/

356, 715,

யா/வெ/

41, 705, 903.

யா/க/

20, 192, 274, 477, 542, 672, 748, 829, 834, 2345,

யா/பரு/

41, 57, 109, 529, 651, 2311, 3058, 3157.

யா/சா/

100, 353, 362. 569, 816, 934, 1023, 2622. 4943, 5409 6073, 6692, 7056.

கி/ப/

511.

யா/வ. கி/

338, 880.

(தொடரும்)

## உதைபந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டவிளையாட்டு அபிவிருத்திக்குழு நடாத்தி வரும் உதைபந்தாட்டப் போட்டியின் 2ம் சுற்றுபோட்டியின் இன்றைய ஆட்டம்;

குருநகர் பாடும் மீன் அணியை எதிர்த்து அளவெட்டி விநாயகர் அணி மோதும். இப்போட்டி சென். பற்றிக்ஸ் கல்லூரிமைதானத்தில் நடைபெறும்.

## "தமிழீழ மண்ணிலிருந்து இசை எழவேண்டும்" தமிழேந்தி

[யாழ்ப்பாணம்]

''தமிழீழத்தில் ஒவ்வொரு அங்குல நிலத்திலுமிருந்து இசை எழவேண்டும். இந்த இசை தமிழீழம் மலரும் போது உலகை வெல்வதாக இருக்கவேண்டும்''.

இவ்வாறு தமிழீழவிடுதலைப் புலிகள் நிதிப்பொறுப்பாளர் தமிழேந்தி நல்லூரில் நடைபெற்ற தமிழிசை விழா இறுதி நாள் நிகழ்ச்சியில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசியதாவது: யாழ்ப்பாணத்தில் 1974ல் நடைபெற்ற தமிழாராய்ச்சி மகாநாட்டுக்கு ஸ்ரீலங்கா அரசாங்கத்திடம் அனுமதி பெறவேண்டியிருந்தது. ஆனுல் இப்பொழுது தமிழீழத்தில் எந்தவிழாக்கள் நடைபெற்றுலும் அனுமதி தேவையில்லை. இந்த நிலை தமிழீழத்தில் ஏற்படுவதற்கு எமது தலைவர் பிரபாகரன் வழி நடத்தல்தான் காரணம்.

நாம் ஒருகாலத்தில் அடிமை

(4.ம் பக்கம் பார்க்க)

## ★ யாழ். செயலகத்திற்கு பாக்கிப் பணத்தை வழங்க வடக்கு கிழக்கு - மாகாணசபை மறுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட புனரமைப்பு வேலைத்திட்டங்களுக்கு கொடுக்க வேண்டிய 1 கோடி 80 லட்சம் ரூபாவுக்குப் பதிலாக, 30லட்சம் ரூபாவை மட்டுமே வடக்கு-கிழக்கு மாகாணசபை தற்போது வழங்கியுள்ளது.

இவ்வருடம் யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் புனரமைப்பு வேலைத்திட்டங்களுக்குத் தேவைப்படும் 13 கோடி 80 லட்சம் ரூபாவை வழங்குவதற்கு அரசு மறுப்புத் தெரிவித்துவிட்டு கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட வேலைத் திட்டங்கள் இனும் செலுத்தப்படாமல் இருந்த 1 கோடி 80 லட்சம் ரூபாவுக்குப் பதிலாக 30 லட்சம் ரூபாவை மட்டுமே வடக்கு- கிழக்கு மாகாணசபை கடந்தவாரம் யாழ். செயலகத்துக்கு அனுப்பியுள்ளது. (வி)

## ஊனமுற்றோருக்கு 1000 ரூபா பண உதவி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு செஞ்சிலுவைச் சங்கக் கிளை, ஊனமுற்றவர்களுக்கு ஆயிரம் ரூபா வீதம் வழங்க முன்வந்துள்ளது.

யாழ் மாவட்டத்தில் உள்ள 32 செஞ்சிலுவைச்சங்கக் கிளைகளிலுமுள்ள ஊனமுற்ற அங்கவீனர்களுக்கு சுயவேலை ஊக்குவிப்புப் பணமாக ரூபா ஆயிரம் வழங்குவதற்கு முன்வந்துள்ளது.

மேற்படி 32 கிளைகளிலுமிருந்து சலா ஒருவரை தெரிவு செய்து அனுப்பும்படி கோப்பாய் செஞ்சிலுவைச் சங்கக் கிளை மற்றைய கிளைகளிடம் கேட்டுள்ளது. -வி

### காஷ்மீர்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இந்தியாவிலிருந்து காஷ்மீரை பிரிப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை. இவ்வாறான ஒரு பிரிவினை இந்தியாவை மேலும் பிளவுபடுத்திவிடும்.

பேச்சுவார்த்தை மூலம் இப்பிரச்னைக்கு தீர்வுகண்டு காஷ்மீர் மாநிலத்திற்கு அதிக சுயாட்சி வழங்கலாமெனவும் கூறினர், [சி]

### இலங்கை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தேவாவும் இலங்கை பிரச்னையைத் தீர்க்க முயலலாமெனவும் அச்செய்திகள் தெரிவித்தன. (சி)

## கொலைகளை ஆராய விசாரணை குழு நியமனம்

(கொழும்பு)

கடந்த மாதம் 28, 29ம் திகதிகளில் பொலநறுவ மாவட்டத்தில் வெலிகந்த பிரதேசத்தில் இடம்பெற்ற கொலைச் சம்பவங்களை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கவென முன்னைநாள் நீதிபதி டி. ஜி. ஜயலத் தலைமையில் விசாரணைக் குழுஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. இக்குழுவில் மேஜர் ஜெனரல் வை. பாலரட்ண ராஜாவும், சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி அப்துல் பஜீத்தும் அங்கம் வகிக்கின்றனர்.

இரு கிராமங்களில் ஏற்பட்ட கொலைச்சம்பவங்களில் 140க்கும் மேற்பட்ட முஸ்லிம், தமிழர் பலியாகியதும் தெரிந்ததே. (கே)

### ஈரோஸ்

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்படி 9 ஈரோஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கொழும்பு வருவதை விடுதலை புலிகள் எதிர்க்கவில்லையென்றும், இவர்கள் கொழும்பு வந்து முதலில் நாடாளுமன்றத்தெரிவுக்குழுவையும், பின்பு ஜனாதிபதி ஆர். பிரேமதாஸாவையும், எதிர்க்கட்சிகளையும் சந்தித்து பேச்சுக்கள் நடாத்துவார்கள் என்றும் லங்காதீப நேற்று வெளியிட்ட செய்தி முற்றிலும் முரணானது என சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (வி)

### கிரிக்கெட்

## அர்ஜுனா ரணதுங்கா மீண்டும் தலைவர்

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் குழுவின் தலைவராக மீண்டும் அர்ஜுன ரணதுங்க தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சர் நந்தா மத்தியூவினால் மேற்படி தெரிவு அனுமதிக்கப்பட்டுள்ளது. (மா)

## கல்விப் பணிப்பாளர் கொழும்பு பயணம்

[யாழ்ப்பாணம்]

கல்விப் பொதுத் தராதர உயர்தர விசேட பரீட்சை விடைத் தாள்களும், 5-ம் ஆண்டு புலமைப் பரீட்சை விடைத் தாள்களும் கல்விப் பணிப்பாளரினால் நேற்று கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டது. (சு)

### முருங்கன் பகுதி

(1ம பக்கத் தொடர்ச்சி)

தளபதி திரு. சுபன் தெரிவித்தார்.

முருங்கன் பகுதி இன்னும் விடுதலைப்புலிகளின் பூரணக் கட்டுப்பாட்டிலேயே இருந்து வருகின்றது. முருங்கனின் எல்லைப்புறத்திலேயே இராணுவத்தினரால் காலடி எடுத்துவைக்க முடியாமல் முகாம்களில் முடங்கிக் கிடக்கின்றார்கள். (வி-59)

## இன்று

[யாழ்ப்பாணம்]

உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்க முன்னாள்பொதுமுகாமையாளர் திரு. சி. குழந்தைவேலுவின் சேவைநலம் பாராட்டு விழா இன்று பிற்பகல் 4 30 மணிக்கு கரணவாய் மகா வித்தியாலயத்தில் திரு. க. இரத்தினசிங்கம் தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் கலந்து கொள்வார்.

## பெயர்ப்பலகை திரைநீக்கம்

[யாழ்ப்பாணம்]

வண்ணை ஸ்ரீ வைத்திலிங்க வித்தியாசாலையின் பெயர்ப் பலகை திரைநீக்க வைபவம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 30 மணிக்கு அதிபர் திரு க. செல்வநாயகம் தலைமையில் நடைபெறும். இவ் வைபவத்தில் பிரதம அதிதியாக கொக்குவில் சொத்தணி அதிபரும், கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபருமான திரு இ. மகேந்திரன் கலந்து கொள்வார்.

## தனிச்சிங்களத்தில் விவரண படிவங்கள்

[சித்தன்கேணி]

கொழும்பிலிருந்து உணவு முத்திரைகள் விநியோகிப்பதற்குரிய உணவுமுத்திரை விவரணத்தாள் தனிச்சிங்களத்தில் யாழ் அரசாங்க செயலகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

வறுமை நிவாரண 7 வது தொடர் உணவுமுத்திரைகள் 6 வது தொடர்பெறும் குடும்பங்களுக்கு விநியோகிப்பதற்குரிய நடவடிக்கைகள் தற்போது யாழ் மாவட்டத்திலுள்ள சகல உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

7 வது தொடர் வறுமை நிவாரண உணவுமுத்திரைகளை விநியோகிப்பதற்குரிய உணவு முத்திரை விவரணத்தாள் தனிச்சிங்களத்தில் கொழும்பிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இதனால் ஊழியர்கள பெரும் சிரமப்படுகின்றனர்.

### புலிகள்மீது

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கத்தில் சிலகட்சித் தலைவர்களிடையே இந்த அதிருப்தி ஏற்பட்டுள்ளது.

ராஜீவ் காந்தியின் கொலையைச் சாட்டாக வைத்தே புலிகள் இயக்கத்தை இந்தியாவில் தடை செய்யலாமென இவர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (கே)

### அரசுக்குஎதிராக

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

நம்பிக்கையில்லாப் பிரேரணை சம்பந்தமான மனுவை நாடாளுமன்றச் செயலாளர் நாயகத்திடம் கையளித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

ஆளும் கட்சியினர் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களை கொலை செய்வதற்குத் தனியாக ஒரு படை வைத்திருந்தமை, விடுதலைப் புலிகளுக்கு ஆயுதம் வழங்கியமை தேர்தல் வன்முறைகளும், மோசடிகளும் தொடர்பான குற்றச்சாட்டுகளும் இந்த அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் முக்கிய இடம் வகிப்பதாகவும் எதிர்க்கட்சிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது [மா]

### மட்டக்களப்பில்

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

மடைந்தனர்.

இப்பகுதியில் மற்றோர் இடத்தில் இடம்பெற்ற கண்ணிவெடியில் ஒரு சிப்பாயும் பொதுமக்களில் ஒருவரும் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது [மா-சி]

### பிரபாவை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதுவரை இவ்வாறான கோரிக்கை எதுவும் இந்தியாவிடமிருந்து வரவில்லை. கோரிக்கை வந்தால் இலங்கையின சட்டத்துறை இதனை பரிசிலிக்கும்.

ராஜீவ் கொலை விசாரணையில் இந்தியாவிற்கு இலங்கை ஒத்துழைப்பு வழங்குமெனவும் திரு. திலகரத்ன தெரிவித்தார். (வி)

### தமிழர் கொலைகளை

(1 ம பக்கத் தொடர்ச்சி)

ஊர்காவல்படை தாக்கி அவர்களை படுகொலை செய்துகொண்டிருந்தது இராணுவ அதிகாரிகளுக்கு நன்கு தெரிந்தும அவர்கள் அதனை தடுக்க முன்வரவில்லை என்றும் பி.பி.ஸி. தெரிவித்தது. (சி)

### தமிழீழ மண்ணிலிருந்து

[3-ம பக்கத் தொடர்ச்சி]

களாகவே இருந்தோம். இப்போது நாம் அடிமைகளல்ல. தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைவிடாத போராட்டம் தான் இதற்குக் காரணமாகும் என்றார். [சு]

### கிழக்கில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முறை நடத்தி வருவதாகவும் கூறப்படுகிறது.

இதுவரை 18 பெண்கள் உட்பட 40 தமிழர் கடத்தப்பட்டு காணமல் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (சி)

### தமிழக அரசுக்கு

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பித்திருந்தவாரண்டை செயல்படுத்தக்கூடாதென்ற உத்தரவை வேண்டுமென்றேமதிக்காமல் நடந்துகொள்ளக்கூடாதென சென்னை, டில்லி ஆகிய இடங்களிலுள்ள சிவில் அதிகாரிகளையும் காவல்துறை அதிகாரிகளையும் உச்ச நீதிமன்றம் எச்சரித்துள்ளது.

உச்சநீதிமன்றத்தின் உத்தரவுக்கு அனைவரும் கட்டுப்படவேண்டுமென்ற அரசியலமைப்பின் 114 பிரிவை நீதிபதிகள் சுட்டிக்காட்டினார்கள்.

உச்சநீதிமன்றத்தின் இந்த உத்தரவுடன் செய்தியாளர்களின் பாதுகாப்புக் கோரினால் சென்னையிலும், டில்லியிலும் அதிகாரப் பொறுப்பில் இருப்பவர்கள் அவருக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டுமென்று நீதிபதிகள் தெரிவித்தார்கள்.

உச்சநீதிமன்றத்தின் உத்தரவையும் மீறி காவல் துறையினர் கைதுசெய்வார்களேயானால் அரசியல் சட்டத்தில் உச்சநீதிமன்றத்திற்கு அதிகாரம் வழங்கும் பிரிவுகளையே ரத்துசெய்துவிடலாம் என்று நீதிபதி திரு. பட்நாயக் கண்டிப்புடன் தெரிவித்தார். (மா)


தென்மராட்சி பிரதேச மக்களுக்கு

ஓர் நற்செய்தி

தென்மராட்சி பிரதேச வாழ் மக்களின் நலன் கருதி

"ஈழநாடு"

விளம்பர கருமபீடம்

இன்று முதல் சாவகச்சேரியில் இயங்கும்

விளம்பரம், செய்தி சம்பந்தமான

உங்கள் சகல அலுவல்களையும் தினசரி காலை 8-30 மணி முதல் எமது கருமபீடத்தில் பூர்த்தி செய்துகொள்ளலாம்.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

சோதி அச்சகம்

(முதலாம் மாடி)

இல. 25, தனங்களப்பு வீதி, சாவகச்சேரி.

(ஏ-2123)


## மரண அறிவித்தல்

### முத்தையா லோகநாதன் (இராசன்)

சுருவில் – ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது ஜேர்மனியில் வசித்தவருமாகிய திரு. முத்தையா லோகநாதன் 6-5-92 அன்று ஜேர்மனியில் காலமாகிவிட்டார். அன்னார், சுருவில முத்தையா, பாக்கியம் ஆகியோரின் சிரேஷ்ட புத்திரனும்: மாலினி [மாலா] யின் அன்புக் கணவரும், பிரதீபா, லக்சுமிபிரசாத், ரம்மியா ஆகியோரின் அன்புத் தந்தையும், கிருபானந்தன் [ஜேர்மனி], விஜயரட்ணம் [கிராம சேவையாளர், புளியங்கூடல்], சோதிநாதன் [இந்தியா], சிவநாதன், ஞானநாதன் [கொழும்பு], ஆகியோரின் அன்புச்சகோதரரும், ஆ. சு. தனிநாயகம், கமலாதேவியின் அன்பு மருமகனும், நீற்று [ஜேர்மனி], சாந்தி [செயலகம், யாழ்ப்பாணம்] செல்வநாயகம் [ஜேர்மனி], மனோகரநாயகம் [ஜேர்மனி], ஸ்ரீதரநாயகம் [ஜேர்மனி], பாஸ்கரநாயகம் [இந்தியா] சாந்தினி [ஜேர்மனி] ஆகியோரின் மைத்துனருமாவார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

20, பாரதி வீதி,
கச்சேரி - நல்லூர் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
மு. விஜயரட்ணம்
(சகோதரர்)

(சி 6274)


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு மே மாதம் 08-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post office Sri Lanka under Licence Number B/10336/81